செ.வெ.எண்: 71 நாள்: 29-11-2017

**பத்திரிக்கை செய்தி (23.11.2017)**

**தகுதி வாய்ந்த பழங்குடியின இனத்தைச் சார்ந்த விண்ணப்பதாரர்களின் கனிவான கவனத்திற்கு**

2017-18-ம் நிதியாண்டில் தாட்கோ மூலம் பழங்குடியின விவசாயிகளுக்காக, விவசாயத்திற்கான விரைந்து மின் இணைப்பு பெறும் திட்டம் (Fast Track Power Supply) செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்புவோர் பழங்குடியின விவசாயியாகவும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 லட்சத்திற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். நிலமானது விண்ணப்பதாரருக்கு சொந்தமாக இருப்பதுடன் அவரது பெயரில் நிலம் பட்டா இருக்க வேண்டும். அந்நிலத்தில் கிணறு அல்லது ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டும், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மின் இணைப்பு கோரி விண்ணப்பித்திருக்க வேண்டும். மேற்கண்ட தகுதியுடையவர்கள் இணையதளத்தில் http://fast.tahdco.com என்ற இணையதள முகவரி மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

மேலும் விபரங்களுக்கு அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் மாவட்ட மேலாளர், தாட்கோ அலுவலகம், போலீஸ் ரிசர்வ்லைன் ரோடு, பாளையங்கோட்டை -627 002 என்ற முகவரியில் நேரில் அணுகி பயனடையுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி